# பங்கேற்பாளர் தகவல் தாள் 10-15 வயதுக்குட்பட்ட குழந்தைகள் வி9

## 03.10.20

COVID-19 நம் எல்லோருடைய வாழ்வையும் மாற்றிவிட்டது. நாடு முழுவதிலும் பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டுள்ளன. பலர் வெளியில் செல்ல முடியாமல் வீட்டிலிருந்தபடியே வேலை செய்ய வேண்டியுள்ளது.  மற்றவர்களால் பணிபுரிய முடியவில்லை.  வைரஸ் பரவி மக்களை நோய்க்குள்ளாக்குவதைத் தடுக்கவே இவ்வாறெல்லாம் செய்ய வேண்டியுள்ளது.

இந்த வைரஸைப் பற்றி மேலும் அறிந்துகொள்ள ஒரு ஆராய்ச்சி ஆய்வில் பங்கேற்குமாறு உங்களை அழைக்கிறோம்.  வைரஸானது இவ்வளவு தீங்கு செய்வதை எவ்வாறு தடுக்கலாம் என்பதை விஞ்ஞானிகள் கண்டறிய இது உதவும்.  தயவுசெய்து இந்த தகவல்களைப் படித்து (பகுதிகள் 1 மற்றும் 2), வயதுவந்த ஒருவருடன் கலந்துரையாடிய பின்னர் நீங்கள் பங்கு பெற விரும்புகிறீர்களா என்பதை முடிவு செய்யவும்.

### ஆய்வு எதைப் பற்றியது?

இந்த ஆராய்ச்சி ஆய்வு புதிய கொரோனா வைரஸ்- கோவிட் -19 பற்றியது. கோவிட் என்பது புதியது, எனவே நமக்கு சில விஷயங்கள் குறித்து தெரியும், ஆனால் நமக்குத் தெரியாத பல விஷயங்கள் உள்ளன.

| கோவிட் -19 பற்றி நமக்கு ஏற்கனவே தெரிந்தது என்ன | நமக்குத் தெரியாதது என்ன மற்றும் வைரஸ் வாட்ச் கண்டுபிடிக்கும் என நாம் நம்புவது என்ன |
|---|---|
| ✓ பெரியவர்களுக்கு கோவிட் வந்தால் அவர்களுக்கு பெரும்பாலும் இருமல் மற்றும் அதிக உடல் வெப்பநிலை இருக்கும் என்பது நமக்குத் தெரியும். | ✗ குழந்தைகளுக்கு வயிற்று வலி, வயிற்றுப்போக்கு அல்லது உடம்பு சரியில்லாமல் இருப்பது போன்ற வெவ்வேறு அறிகுறிகள் ஏற்படுகிறதா என்பது நமக்குத் தெரியவில்லை. |
| ✓ கோவிட் வயதுவந்த சிலரை மிகவும் பாதிக்கிறது, ஆனால் குழந்தைகள் கோவிட் மூலம் மிகவும் பாதிக்கப்பட வாய்ப்பில்லை என்பதை நாம் அறிவோம். | ✗ எத்தனை பேருக்கு ஜலதோஷம் போன்ற லேசான நோய் ஏற்படுகிறது அல்லது குழந்தைகளுக்கு நோய்வாய்ப்படாமலேயே கோவிட் தொற்று ஏற்படுமா என்பது நமக்குத் தெரியாது. |
| ✓ நமது உடல்கள் சில நோய்த்தொற்றுகளை நினைவில் வைத்திருந்து, எதிர்காலத்தில் அவற்றை எதிர்த்துப் போராடலாம் என்பதை நாம் அறிவோம். | ✗ ஒரு முறை கோவிட் தாக்கினால் அது மீண்டும் உங்களுக்கு வருவதைத் தடுக்குமா என்பது நமக்குத் தெரியாது. |
| ✓ கோவிட் மிக எளிதாக பரவக்கூடும் என்பது நமக்குத் தெரியும். | ✗ குழந்தைகளிடமிருந்து கோவிட் எவ்வளவு விரைவாக பரவுகிறது என்பது நமக்குத் தெரியாது. |
| ✓ கோவிட் பரவுவதைத் தடுக்க அரசாங்கம் நமக்கு நிறைய | ✗ இந்த அறிவுரையை எத்தனை பேரால் பின்பற்ற |

| | |
|---|---|
| அறிவுரைகளை வழங்கியுள்ளது என்பது நமக்குத் தெரியும். | முடியும் என்பது நமக்குத் தெரியாது. |

**நான் பங்கேற்க வேண்டும் என ஏன் விரும்புகிறீர்கள்?**

ஒவ்வொரு வீட்டிலும் உள்ள அனைவரும் வைரஸ் வாட்ச் ஆய்வில் பங்கேற்க வேண்டும், எனவே குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் மற்றும் பெரியவர்களை நாங்கள் சேர்ப்பது மிகவும் முக்கியமாகும்.

எத்தனை குழந்தைகள் மற்றும் இளைஞர்களை கோவிட் தாக்குகிறது, மற்றும் அவர்கள் மூலம் வீட்டில் உள்ள மற்றவர்களுக்கு தொற்றுநோய் பரவுகிறதா என்பதை நாங்கள் அறிந்து கொள்ள வேண்டும். அதாவது மற்றும் உங்கள் வீட்டில் உள்ள அனைவரும் பங்கேற்க வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம்.

பள்ளிகளை மூடுவது எவ்வளவு பயனுள்ளதாக இருக்கும், எவ்வளவு காலத்திற்கு மூடப்பட வேண்டும், மற்றும் எப்போது இது நடக்க வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ள இது உதவும்.

**நான் பங்கேற்கத் தான் வேண்டுமா?**

இல்லை. பங்கேற்பதும் அல்லது பங்கேற்காமல் இருப்பதும் உங்களைப் பொறுத்த முடிவே ஆகும். நீங்கள் எந்த நேரத்திலும் ஆய்வை விட்டு வெளியேறலாம் மற்றும் நீங்கள் எங்களுக்கு எந்தவொரு காரணத்தையும் கூற வேண்டியதில்லை.

**நான் என்ன செய்ய வேண்டும்?**

ஆய்வில் பல பகுதிகள் உள்ளன; அவை:
1) நோய்கள் மற்றும் பிற தகவல்களை பற்றி ஆன்லைனில் தெரிவித்தல்
2) மருத்துவமனைகளிலிருந்து மருத்துவப் பதிவுகளின் பகுப்பாய்வு
3) மக்களுக்கு கோவிட் நோய் தாக்கியுள்ளதா என்று அறிய ஒரு ஸ்வாபிங் ஆய்வு

4) மக்களுக்கு கோவிட்-க்கான நோய் எதிர்ப்பு சக்தி உருவாகியுள்ளதா என்று அறிய ஒரு இரத்த பரிசோதனை ஆய்வு.

வைரஸ் வாட்சின் ஒரு பகுதியாக இருக்கும் வீட்டு உறுப்பினர்கள் அனைவரும் முதல் இரண்டு பகுதிகளிலும் பங்கேற்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம், ஆனால் மூன்றாவது மற்றும் நான்காவது ஆய்வுகளில் பங்கேற்க வீட்டு உறுப்பினர்கள் சிலர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுவார்கள். வீட்டில் உள்ள எந்த உறுப்பினர்களை ஸ்வாபிங் மற்றும் இரத்த பரிசோதனை ஆய்வுகளுக்கு அழைக்க வேண்டும் என்பதை நாங்கள் பின்னர் தேர்வு செய்வோம், இதன்மூலம் கோவிட் மக்கள் குழுக்களை எவ்வாறு பாதிக்கிறது என்பதைப் பற்றி இரு பிரிவிலும் கலப்பாக உள்ள வீட்டு உறுப்பினர்கள் மூலம் சிறப்பாகச் அறிய முடியும்.

1) ஆய்வின் தொடக்கத்தில், உங்கள் வீட்டில் வயது வந்த ஒருவர் உங்களைப் பற்றிய சில கேள்விகளுக்கு பதிலளிப்பார். உங்கள் வயது என்ன, உங்களுக்கு ஆஸ்துமா போன்ற மருத்துவ நிலைமைகள் ஏதேனும் உள்ளதா என்பதை நாங்கள் அறிய விரும்புகிறோம்.

**ஆன்லைன் நோய் தெரிவித்தல் ஆய்வு** - உங்கள் வீட்டில் யாராவது இருமல் மற்றும் சளி மற்றும் கோவிட் நோயாக இருக்கக்கூடும் போன்ற அறிகுறிகளால் நோய்வாய்ப்பட்டிருக்கும்போதெல்லாம் அவர்கள் நோய்வாய்ப்பட்டிருக்கும் ஒவ்வொரு நாளும் தங்கள் அறிகுறிகளை எழுத வேண்டும். இதற்கு உங்கள் குடும்பத்தினர் உங்களுக்கு உதவ முடியும். ஒவ்வொரு வாரமும் உங்கள் வீட்டில் வயது வந்த ஒருவருக்கு, யாருக்காவது உடல்நிலை சரியில்லாமல் இருக்கிறார்களா இல்லையா என்று கேட்டு, அவர்களின் அறிகுறிகளை கணினி சர்வேயில் பதிவு செய்யும்படியும் ஒரு மின்னஞ்சல் வரும். மாதத்திற்கு ஒருமுறை, உங்கள் வீட்டில் உள்ளவர்களிடம் COVID-19 பற்றிய எந்த கேள்விகள் அவர்களுக்கு முக்கியம் என்று நாங்கள் கேட்போம், மற்றும் அவற்றுக்கு பதிலளிக்க எங்களால் முடிந்த அனைத்தையும் செய்வோம்.

ஆய்வு முடிந்த பிறகு 5 வருடங்கள் வரை நாங்கள் இதைச் செய்யலாம். ஏனென்றால் ஒவ்வொரு குளிர்காலத்திலும் இந்த வைரஸ் மீண்டும் வரும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

3) நோயுற்றிருக்கும்போது, வீட்டிலிருக்கும் அனைவரும் அல்லாமல் சிலர் **மூக்கு மற்றும் தொண்டை ஸ்வாப்களை** வழங்கும்படி கேட்டுக்கொள்ளப்படுவார்கள். இதில் வலி இருக்காது மற்றும் ஒரு பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஒரு சிறிய ப்ரஷை எடுத்து உங்கள் தொண்டையின் பின்புறத்தை மெதுவாக தடவுவது, பின்னர் உங்கள் மூக்கின் உட்புறத்தை தடவுவது ஆகியவற்றை உள்ளடக்கும். பின்னர் இது COVID-19 க்காக சோதிக்கும் ஒரு ஆய்வகத்தில் உள்ள விஞ்ஞானிகளுக்கு அனுப்பட்டு, பிற பொதுவான சுவாச நோய்த்தொற்றுகளுக்கு (சளி மற்றும் ஃப்ளூ காய்ச்சல் போன்றவை) சோதிக்க சேமிக்கப்படும்.

உங்கள் வீட்டில் வேறு யாராவது நோய்வாய்ப்பட்டிருக்கும்போது வெவ்வேறு நாட்களில் பல முறை மூக்கு மற்றும் தொண்டை ஸ்வாப்களை எடுக்கும்படி நாங்கள் உங்களிடம் **கேட்கலாம்** . இதன் மூலம் COVID-19 ஒரு நபரிடமிருந்து மற்றவருக்கு எவ்வளவு விரைவாகவும் எளிதாகவும் பரவுகிறது மற்றும் சிலர் நோய்வாய்ப்படாமல் எப்படி கோவிட் நோய்த்தொற்றால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அறியலாம்.

4)மேலும் நாங்கள் இரண்டு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் ஒரு சிறிய அளவு இரத்தத்தை கொடுக்கும்படி உங்களை **கேட்டுக்கொள்ளலாம்** (சுமார் 3 டீஸ்பூன் முழுதும் - 15 மிலி). நீங்கள் ஊசியின் குத்தும் உணர்வை அதிகம் உணராத வகையில் மரத்துப்போவதற்கான ஒரு கிரீமை நாங்கள் பயன்படுத்தலாம். COVID-19 மற்றும் பிற சுவாச நோய்த்தொற்றுகளுக்கு நமது உடலின் நோயெதிர்ப்பு மண்டலம் எவ்வாறு பதில் செயலாற்றுகிறது மற்றும் இந்த பாதுகாப்பு எவ்வளவு காலம் வரை நீடிக்கும் என்பது பற்றிய முக்கியமான விஷயங்களை இந்த இரத்த மாதிரி நமக்குத் தெரிவிக்கும். இந்த இரத்த பரிசோதனை

மருத்துவர்கள் கிளினிக் அல்லது மருத்துவமனையில் அல்லது உங்கள் வீட்டில் நடக்கும்.

நீங்கள் ஒரு இரத்த மாதிரியை வழங்க விரும்பவில்லை என்றால், அதற்கு பதிலாக ஒரு கைவிரல் குத்தல் மாதிரியை வழங்குமாறு நாங்கள் உங்களிடம் கேட்கலாம். உங்கள் கைவிரலில் சிறிதளவு குத்துவதன் மூலம், ஆண்டிபாடி சோதனை கேசட்டில் உள்ள உறிஞ்சக்கூடிய காகிதத் துண்டில் ஒரு துளி இரத்தத்தை சேகரிப்பதன் மூலம் இது செய்யப்படுகிறது. உங்களுக்கு முன்பு COVID-19 இருந்ததா என்று 10 நிமிடங்களில் இந்த சோதனை எங்களுக்குத் தெரிவிக்கும்.

5) மேலும் உங்கள் வீட்டில் உள்ள யாருக்காவது கோவிட் -19 அறிகுறிகள் தோன்றிய 2 வாரங்களுக்குப் பிறகு மேலே விவரிக்கப்பட்டுள்ள கைவிரல் குத்தல் மாதிரிகளை வழங்கவும் நாங்கள் உங்களிடம் **கேட்கலாம்** .

**நீங்கள் இரத்தம் கொடுக்க வேண்டிய கட்டாயமில்லை, அது முற்றிலும் நீங்கள் தான் தீர்மானிக்க வேண்டும், நீங்கள் இரத்தம் கொடுக்க வேண்டாம் என்று தேர்வுசெய்தால், நீங்கள் இன்னமும் ஆய்வில் பங்கேற்கலாம்.**

**இந்த ஆய்வு எவ்வளவு காலம் வரை நடக்கும்?**

இந்த ஆய்வு அடுத்த ஆண்டு வசந்த காலம் வரை நடக்கும் (2021).

**எனக்கு மேலும் கேள்விகள் இருந்தால் என்ன செய்வது?**
உங்களுக்கு மேலும் ஏதேனும் கேள்விகள் இருந்தால், பின்வரும் முகவரிக்கு எங்களுக்கு ஒரு மின்னஞ்சல் அனுப்பும்படி வயதுவந்த ஒருவரிடம் கேட்கலாம்: viruswatch@ucl.ac.uk

**பகுதி 1ஐப் படித்ததற்கு நன்றி.**

**உங்களைப் பற்றிய தகவல்கள் எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்பதைப் பற்றி அடுத்த பகுதி விவரிக்கின்றது.**

**குழந்தைகளின் பங்கேற்பாளர் தகவல் தாள் பகுதி 2**

- **நான் ஆய்வில் பங்கேற்பது இரகசியத்தன்மையுடன் இருக்குமா?** ஆம். எங்கள் சர்வேக்களில் உங்கள் வழிநடத்தும் குடும்ப உறுப்பினர் உள்ளிடும் அனைத்து தகவல்களும் நேரடியாக யு.சி.எல் (டேட்டா சேஃப் ஹேவன்) இல் உள்ள பாதுகாப்பான கணினிகளுக்குச் செல்லும். உங்களை அடையாளம் காண பயன்படுத்தக்கூடிய தனிப்பட்ட தரவுகளுக்கான அணுகல் யு.சி.எல் இல் குறைந்த எண்ணிக்கையிலான பயிற்சி பெற்ற ஆராய்ச்சியாளர்களுக்கு மட்டுமே அளிக்கப்படும். அடையாளம் காணும் தகவல்கள் (என்.ஹெச்.எஸ் எண்கள் மற்றும் பெயர்கள் போன்றவை) உங்கள் உடல்நலம், சோதனை முடிவுகள் அல்லது சர்வே மூலம் சேகரிக்கப்படும் வேறு எந்த தகவல்களிலிருந்தும் ஒரு தனி தரவுத்தளத்தில் வைக்கப்படுகின்றன. இந்த ஆய்வுத்திட்டத்தில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்கும் தனிநபர்களைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாக்க இரகசியத்தன்மையின் சட்டபூர்வமான கடமை உள்ளது. தரவுகளுடன் பணிபுரியும் அனைத்து பணியாளர்களும் தரவை ரகசியமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருப்பதில் சிறப்பு பயிற்சி பெற்றிருக்கிறார்கள்.

  அனைத்து தகவல்களும் தரவு பாதுகாப்பு சட்டத்திற்கேற்ப சேகரிக்கப்பட்டு சேமிக்கப்படும். குறைந்தபட்சம் 10 ஆண்டுகளுக்கு தரவை சேமிப்பதே யுசிஎல்-இன் கொள்கை ஆகும். **ஆய்வுகள் 3 மற்றும் 4 இல் பங்கேற்க உங்கள் வீட்டிலிருப்பவர்கள் அழைக்கப்பட்டால்** , உங்களைப் பற்றிய சில தகவல்களை நாங்கள் பகிர வேண்டியிருக்கலாம். இந்த தகவலில் உங்கள் பெயர், முகவரி, பிறந்த தேதி மற்றும் பாலினம் ஆகியவை உள்ளடங்கும். உங்கள் மாதிரிகளை அடையாளம் கண்டு சோதிக்கவும் மற்றும் உங்கள் சோதனை முடிவுகளை உங்கள் பெற்றோர் அல்லது பாதுகாவலரிடம் தெரிவிக்கவும் ஆய்வகத்திற்கு இந்த தகவல் தேவைப்படுகிறது.

என்.ஹெச்.எஸ் ஆராய்ச்சி செவிலியர்கள் / தனியார் ஃபிளெபோடோமி நிறுவனத்திற்கு இரத்தம் எடுக்கும் வருகைகளை ஒழுங்கமைக்க இந்த தகவல் தேவைப்படும், மேலும் உங்கள் வீட்டுக்கு ஒரு ஆய்வு கிட் பேக்கைக் அமைத்து அனுப்ப நிறுவனத்திற்கு இந்த தகவல் தேவைப்படும்.

**உள்ளூர் தரவு பாதுகாப்பு தனியுரிமை நோட்டீஸ்:**
இந்த ஆய்வுத்திட்டத்திற்கான கட்டுப்பாட்டாளர் லண்டன் பல்கலைக்கழக கல்லூரி இருக்கும் (யு.சி.எல்). தனிப்பட்ட தரவுகளை செயலாக்குவது சம்பந்தப்பட்ட யு.சி.எல் செயல்பாடுகளை யு.சி.எல் தரவு பாதுகாப்பு அதிகாரி மேற்பார்வை செய்கிறார் மற்றும் அவர் dataprotection@ucl.ac.uk இல் தொடர்பு கொள்ளப்படலாம்
உடல்நலம் மற்றும் கவனிப்பு ஆராய்ச்சி ஆய்வுகளில் பங்கேற்பாளர்களுக்கு யு.சி.எல் பங்கேற்பாளர் பற்றிய தகவலை எவ்வாறு பயன்படுத்துகிறது என்பது பற்றிய கூடுதல் தகவல்கள், க்ளிக் செய்க https://www.ucl.ac.uk/legal-services/privacy/ucl-general-privacy-notice-participants-and-researchers-health-and-care-research-studies

தரவு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தகவல்கள் (GDPR மற்றும் DPA 2018) 'குறிப்பிட்ட இடத்துக்குரிய' மற்றும் 'பொதுவான' தனியுரிமை நோட்டீஸ்கள் ஆகிய இரண்டிலுமே வழங்கப்படுகிறது. யு.சி.எல் இல் இந்த ஆய்விற்கான தனிப்பட்ட தரவை செயலாக்குவதற்கான சட்டபூர்வமான அடிப்படை உட்பிரிவு 6 (1) (இ) "பொது பணி" மற்றும் உட்பிரிவு 9 (2) ஜே "பொது நலன், அறிவியல் அல்லது வரலாற்று ஆராய்ச்சி நோக்கங்கள் அல்லது புள்ளிவிவர நோக்கங்களுக்காக காப்பகத்திற்கு செயலாக்கம் அவசியமாகிறது ". ஆகியவற்றின் கீழ் வருகிறது. உங்கள் தனிப்பட்ட தரவு ஆராய்ச்சி ஆய்வுத்திட்டத்திற்கு தேவைப்படும் வரை செயல்படுத்தப்படும். நீங்கள் வழங்கும் தனிப்பட்ட தரவை அநாமதேயமாக்கவோ அல்லது போலி-அநாமதேயமாக்கவோ எங்களால் முடிந்தால் நாங்கள் இதை மேற்கொள்வோம், மேலும் முடிந்தவரையில் தனிப்பட்ட தரவின் செயலாக்கத்தைக் குறைக்க முயற்சிப்போம்.
உங்கள் தனிப்பட்ட தரவு எவ்வாறு செயலாக்கப்படுகிறது என்பது குறித்த கவலை உங்களுக்கு இருந்தால், அல்லது உங்கள் உரிமைகள்

குறித்து எங்களை தொடர்பு கொள்ள விரும்பினால், data-protection@ucl.ac.uk இல் தயவுசெய்து யு.சி.எல் ஐ முதலில் தொடர்பு கொள்ளவும். உங்களுக்கு திருப்தி இல்லை என்றால், நீங்கள் தகவல் ஆணையரின் அலுவலகத்தை (ஐ.சி.ஓ) (https://ico.org.uk/concerns/handling/) தொடர்பு கொள்ள விரும்பலாம்.

## உங்கள் தகவல்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பது குறித்த உங்கள் தேர்வுகள் என்ன?

- எந்தவொரு காரணத்தையும் தெரிவிக்காமல், எந்த நேரத்திலும் நீங்கள் ஆய்வின் ஒரு பகுதியாக இருப்பதை நிறுத்திக்கொள்ளலாம், ஆனால் எங்களிடம் ஏற்கனவே உள்ள உங்களைப் பற்றிய தகவல்களை நாங்கள் வைத்திருப்போம்.
- ஆய்வில் பங்கேற்பதை நிறுத்திக்கொள்ள நீங்கள் தேர்வுசெய்தால், மத்திய என்.எச்.எஸ் பதிவுகளிலிருந்து உங்கள் உடல்நலம் குறித்த தகவல்களைத் தொடர்ந்து சேகரிக்க விரும்புகிறோம். இது நடப்பதை நீங்கள் விரும்பவில்லை என்றால், எங்களிடம் சொல்லவும், நாங்கள் நிறுத்திவிடுவோம்.
- ஆராய்ச்சி நம்பகமானதாக இருக்க உங்கள் பதிவுகளை குறிப்பிட்ட வழிகளில் நாங்கள் நிர்வகிக்க வேண்டும். அப்படியென்றால், உங்களைப் பற்றி நாங்கள் வைத்திருக்கும் தரவைப் பார்க்கவோ மாற்றவோ உங்களை அனுமதிக்க முடியாது என்பதாகும்.
- இந்த ஆய்வில் பங்கேற்க நீங்கள் ஒப்புக்கொண்டால், இந்த ஆய்வில் இருந்து சேமிக்கப்பட்ட உங்கள் தரவைப் பயன்படுத்தி எதிர்கால ஆராய்ச்சியில் பங்கேற்க உங்களுக்கு விருப்பத்தேர்வு இருக்கும்.

## உங்கள் தகவல்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பது பற்றி மேலும் எங்கு அறியலாம்?

உங்கள் தகவல்களை நாங்கள் எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பது பற்றி பின்வருவனவற்றின் மூலம் மேலும் அறியலாம்

- www.hra.nhs.uk/information-about-patients/
- எங்கள் ஆய்வு வலைத்தளம் www.ucl-virus-watch.net

- ஆராய்ச்சி குழுவில் ஒருவரைக் கேட்பதன் மூலம்
- ஆய்வு மேலாளருக்கு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலம் **viruswatch@ucl.ac.uk**

- **ஆய்வு நடத்தப்படும் முறை குறித்து நான் மனநிறைவடையவில்லை என்றால் என்ன செய்வது?** பங்கேற்பவர்களுக்கு இந்த ஆய்வை முடிந்தவரை எளிதாக்க நாங்கள் முயற்சி செய்துள்ளோம், நீங்கள் கையாளப்பட்ட விதம் குறித்து உங்களுக்கு ஏதேனும் புகார் இருந்தால், அதற்கு தீர்வு காணப்படும். ஆய்வு நடத்தப்படும் விதம் குறித்து நீங்கள் புகாரளிக்க விரும்பினால், யு.சி.எல் தொற்றுநோயியல் மற்றும் பொது சுகாதாரத் துறை, 1-19 டோரிங்டன் பீ.எல்., ஃபிட்ஸ்ரோவியா, லண்டன் டபிள்யு.சி.1E 7எச்.பி என்ற முகவரியில் ஆய்வு மேலாளரைத் தொடர்பு கொள்ள அல்லது viruswatch@ucl.ac.uk க்கு மின்னஞ்சல் அனுப்ப உங்கள் வீட்டிலுள்ள வயதுவந்த ஒருவரிடம் கேட்டுக்கொள்ளவும். நீங்கள் இன்னமும் மனநிறைவற்றவராகவே இருந்தால், யு.சி.எல் நன்நெறிக் குழு விடம் உங்கள் புகாரை எழுப்பலாம்: ethics@ucl.ac.uk மற்றும் பின்வரும் முகவரிக்கு நகல் அனுப்பவும்research-incidents@ucl.ac.uk.

- **தீங்கு:** பங்கேற்பதன் மூலம் நீங்கள் காயமடையும் சாத்தியம் இல்லையென்றாலும், அவ்வாறு நிகழ்ந்தால் இழப்பீடு கிடைக்கக்கூடும், ஆனால் உங்கள் சட்ட செலவுகளை நீங்கள் செலுத்த வேண்டியிருக்கும். ஸ்பான்சருடைய (லண்டன் பல்கலைக்கழக கல்லூரி) கவனக்குறைவின் விளைவாக இந்த காயம் ஏற்பட்டதாக நீங்கள் சந்தேகித்தால், நீங்கள் இழப்பீடு கோரலாம். தயவுசெய்து உங்கள் வீட்டிலுள்ள வயதுவந்த ஒருவரிடம் மருத்துவ சோதனை / ஆய்வுக்கான தலைமை ஆய்வாளராகவும், யு.சி.எல் 1-19 டோரிங்டன் பிளேஸில் உள்ள பேராசிரியர் ஆண்ட்ரூ ஹேவர்டுக்கு எழுத்துப்பூர்வமாக உரிமை கோரும்படி கேட்கவும். தலைமை ஆய்வாளர் பின்னர் உரிமைகோரலை ஸ்பான்சருக்கும் ஸ்பான்சரின் காப்பீட்டாளர்களுக்கும் அனுப்புவார். மேலும், சாதாரண தேசிய சுகாதார சேவை புகார்கள் வழிமுறைகள் உங்களுக்கு இன்னமும் கிடைக்கும் (பொருத்தமானது என்றால்).

## பகுதி 2 ஐப் படித்ததற்கு நன்றி